# சென்னை மெட்ரோ ரயில் இணையதளம் உங்களை வரவேற்கின்றது

வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வரும் சென்னை மாநகரின் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் பெருகிக் கொண்டே வருகிறது. எனவே, இருப்புப்பாதை அடிப்படையிலான விரைவான போக்குவரத்து திட்டமொன்றின் தேவையினை உணர்ந்து, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழகம், பேருந்துகள் உள்ளிட்ட தனியார் போக்குவரத்து கட்டமைப்பு புறநகர் ரயில் சேவை மற்றும் துரித போக்குவரத்து ரயில் திட்டம் இவைகளுடன் இணைந்து, விரைவான, வசதியான, நம்பிக்கைக்குகந்த, செயல்திட்பமுடைய, அதிநவீன, சிக்கனத்தின் அடிப்படையிலான போக்குவரத்து திட்டமொன்றினை வழங்கிடுவதே இந்த சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் நோக்கமாகும்.

## நிறுவனம் பற்றிய தகவல்

இந்த திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் என்கிற சிறப்புவகை பொதுத்துறை நிறுவனத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கி உள்ளது. இந்த நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 3.12.2007 அன்று பதிவு செய்யப்பட்டு, தற்போது கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் இயங்கி வருகின்றது .

எண். 11/6 சீதம்மாள் சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை– 600 018

தொலைபேசி எண் – 91 44-24310174
நிகரி – 91 44-24312430
மின்னஞ்சல் முகவரி – chennaimetrorail@gmail.com

சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தில் கீழே குறிப்பிட்டுள்ளோர் இடம் பெற்றுள்ளனர்–

| | | |
|---|---|---|
| 1) | – | தலைவர் |
| 2) | முனைவர். டி.வி.சோமநாதன், இ.ஆ.ப.,<br>செயலர், சிறப்பு முயற்சிகள் துறை – | மேலாண் இயக்குநர் |
| 3) | திரு கே.ஞானதேசிகன், இ.ஆ.ப.,<br>முதன்மை செயலர், நிதித்துறை – | இயக்குநர் |
| 4) | முனைவர். டி. நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப.,<br>செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும்<br>குடிநீர் வழங்கல் துறை – | இயக்குநர் |
| 5) | திரு கே. அலாவுதீன், இ.ஆ.ப.,<br>முதன்மை செயலர், நெடுஞ்சாலைகள் மற்றும்<br>சிறு துறைமுகங்கள் துறை – | இயக்குநர் |
| 6) | திரு தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப.,<br>முதன்மை செயலர், போக்குவரத்துத்துறை – | இயக்குநர் |
| 7) | திரு சுர்ஜித் கே சவுதரி, இ.ஆ.ப.,<br>முதன்மை செயலர், வீட்டுவசதி மற்றும்<br>நகர்ப்புற வளர்ச்சித்துறை – | இயக்குநர் |
| 8) | திரு விக்ரம்கபூர், இ.ஆ.ப.,<br>உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர<br>வளர்ச்சிக் குழுமம் – | இயக்குநர் |

## நோக்கம்

மாநகரப் போக்குவரத்துக் கழகம், பேருந்துகள் உள்ளிட்ட தனியார் போக்குவரத்து கட்டமைப்பு, புறநகர் ரயில் சேவை மற்றும் மாநகர துரிதப் போக்குவரத்து ரயில் திட்டம் இவைகளுடன் இணைந்து, விரைவான, வசதியான, நம்பிக்கைக்குகந்த, செயல்திட்பமுடைய அதிநவீன சிக்கனத்தின் அடிப்படையிலான போக்குவரத்து திட்டமொன்றினை சென்னை பெருநகர மக்களுக்கு வழங்கிடுவதே இந்த சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் நோக்கமாகும்.

## திட்டத்தின் வடிவுருவம்

இந்தத் திட்டம் தொடர்பாக ஒரு விரிவான திட்ட அறிக்கையினை டெல்லி மெட்ரோ ரயில் கார்ப்பரேசன் தயாரித்துள்ளது. இந்த அமைப்பு மெட்ரோ ரயில் திட்டத்தை டெல்லியில் சிறப்பாக அமைத்து செம்மையாக செயல்படுத்தி வருகின்றது. மேலே குறிப்பிட்டுள்ள விரிவான திட்ட அறிக்கையில் முதற்கட்டமாகக் கீழே கானும் இரண்டு மெட்ரோ ரயில் பாதைகளை அமைத்திடலாமென கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மெட்ரோ ரயில் விவரம் | தொலைவு | செல்லும் பாதையில் வரும் இடங்களின் விவரம் |
|---|---|---|
| வண்ணாரப்பேட்டையிலிருந்து விமானநிலையம் வரை | **23.085கி.மீ** | வண்ணாரப்பேட்டை– ப்ராட்வே (பிரகாசம் சாலை)– சென்னை சென்ட்ரல்– ரிப்பன் மாளிகை (கூவம் கரை ஓரமாக)– தாராபூர் கட்டிடம்– ஸ்பென்ஸர்ஸ்– ஜெமினி – அண்ணாசாலை– சைதாப்பேட்டை, கிண்டி– சென்னை விமான நிலையம். |

| | | |
|---|---|---|
| சென்னை சென்ட்ரலில் இருந்து பரங்கிமலை வரை | 21.961 கி.மீ | சென்னை சென்ட்ரல், ஈ.வே.ரா பெரியார் சாலை வழியாக வேப்பேரி – கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி – அமிஞ்சிக்கரை– ஷெனாய் நகர் – அண்ணாநகர் கிழக்கு – அண்ணாநகர்– திருமங்கலம் – கோயம்பேடு பேருந்து நிலையம்– வடபழனி – அசோக்நகர் – சிட்கோ– ஆலந்தூர்– பரங்கிமலை . |
| மொத்தம் | 45.046கி.மீ | |

இந்த இரு பாதைகளின் விவரம் கீழே காணும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

CHENNAI METRO RAIL PROJECT



இந்த திட்டத்தின் பெரும்பகுதி சுரங்கப்பாதையாகவும் மீதமுள்ள பகுதி சாலைமட்டத்திற்கு மேல் உயர்த்தப்பட்ட பாதையாகவும் அமைக்கப்படவுள்ளன.

மேலே கூறப்பட்டுள்ள இரு பாதைகள் மற்றும் நிலையங்கள் பற்றிய தகவல்கள் தற்காலிகமானவை. இவை விரிவாக வடிவமைத்து செயல்படுத்தப்படும்போது செய்யப்படக்கூடிய மாறுதல்களுக்குட்பட்டவையாகும்.

## திட்டத்தின் நிலை

திட்டம் நிறைவு பெறுதல்

முதல்கட்டப் பணிகள் 2014 –2015 நிதியாண்டில் முடிவுறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஒப்புதல்

தமிழ்நாடு அரசு 7.11.2007 அன்று இரண்டு மெட்ரோ இரயில் பாதைகளுக்கும் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசு 28.1.2009 அன்று சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

ஜப்பான் நாட்டு நிதியுதவிக்கான ஒப்பந்தம் கையெழுத்திடுதல்

இந்த திட்டத்திற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.14,600 கோடி (விலைவாசி உயர்வு, மத்திய அரசின் வரிகள் மற்றும் கட்டுமான காலங்களில் ஏற்படும் வட்டி உட்பட, ஆனால் மாநில அரசின் வரிகள் மற்றும் மாநில அரசின் காலி நிலங்களுக்கான விலை நீங்கலாக) என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான செலவில் 41%–னை மாநில, மத்திய அரசுகள் கூட்டாகப் பகிர்ந்துகொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. மீதி செலவுத்தொகை ஜப்பானின் அனைத்து நாடுகள் கூட்டுறவுக்கான அமைப்பு அனுமதித்துள்ள கடனுதவியின் மூலம் சரிகட்டப்படும். ஜப்பானின் அனைத்து நாடுகள் கூட்டுறவுக்கான அமைப்பு இந்த திட்டத்திற்கு நிதியுதவி வழங்கிட ஒப்புக்கொண்டு இது தொடர்பான ஒப்பந்தம் 21.11.2008 அன்று டோக்கியா நகரில் கையெழுத்தானது.

பொது ஆலோசகர்கள் நியமனம்

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டப்பணிகளுக்கான "பொது ஆலோசகர்கள்" 24.02.2009 அன்று தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஈஜிஸ் இரயில் (Egis Rail, France) என்ற நிறுவனத்தின் தலைமையில் ஐந்து நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு கூட்டமைப்பு, மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பொது ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இக்கூட்டமைப்பின் பிற உறுப்பினர்கள் (அ) ஈஜிஸ் இந்தியா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், இந்தியா (Egis India Consulting Engineers Private Ltd, India) (ஆ) மான்செல் கன்சல்டன்ட்ஸ் ஏசியா லிமிடெட், ஹாங் காங் (Maunsell Consultants Asia Ltd, Hong Kong), (இ) பாலாஜி இரயில் ரோடு சிஸ்டம்ஸ் லிமிடெட், இந்தியா (Balaji Rail Road Systems Ltd, India ) மற்றும் (ஈ) யாச்சியோ இன்ஜினியரிங் கோ லிமிடெட், ஜப்பான் (Yachio Engineering Co Ltd. Japan). சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான வடிவமைப்பு (design), மேற்பார்வை (Supervision ), தரக்கட்டுப்பாடு (Quality Control), பாதுகாப்பு (Safety) மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாடு மேலாண்மை (Contract Management) ஆகியவற்றில் பொது ஆலோசகர்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு உதவி செய்வார்கள்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் ஒப்பந்தம்

மெட்ரோ இரயில் திட்டத்திற்கான முதல் ஒப்பந்தப்பணி 13.02.2009 அன்று உறதராபாத்தைச் சோந்த திருவாளர்கள் சோமா என்டர்பிரைசஸ் (M/s Soma Enterprises) என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கோயம்பேட்டிலிருந்து அசோக்நகர் வரை 4.5 கி.மீ நீளம் உள்ள உயர்த்தப்பட்ட வழித்தடம் கட்டுவதற்கான பணி ஒப்பந்தம் ரூ.199.20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதன்மை ஆலோசகர் நியமனம்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளுக்கான "முதன்மை ஆலோசகராக" டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தை நியமித்துள்ளது. முதன்மை ஆலோசகர் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்துவதில் ஆலோசனைகள் வழங்கி உதவி செய்வதோடு, பொது ஆலோசகர்களின் பணிகளையும் மேற்பார்வையிடுவர். மேலும், கட்டுமானப்பணிகள் நடைபெறும் காலங்களில் ஏற்படும் பல்வேறு விளைவுகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கோரும் தகவல்களைத் தந்து, ஆலோசனைகள் வழங்கி உதவுவார்கள்.

## திட்டத்தின் அவசியம்

வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வரும் சென்னை மாநகரின் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் பெருகிக் கொண்டே வருகிறது. எனவே, இருப்புப்பாதை அடிப்படையிலான விரைவான போக்குவரத்து திட்டமொன்றின் தேவையினை உணர்ந்து, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழகம், பேருந்து உள்ளிட்ட தனியார் போக்குவரத்து புறநகர் ரயில் சேவை மற்றும் துரித போக்குவரத்து ரயில் திட்டம் இவைகளுடன் இணைந்து, விரைவான, வசதியான, நம்பிக்கைக்குகந்த, செயல்திட்பமுடைய, அதிநவீன, சிக்கனத்தின் அடிப்படையிலான போக்குவரத்து திட்டமொன்றினை வழங்கிடுவதே இந்த சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் நோக்கமாகும்.

*******